# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 35/மா/2023**
**நாள் : 01.03.2023**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் என்பவரின் 22.11.2022 நாளிட்ட மனு 23.11.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 35/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு எண்.14/15, என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 22.11.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

"சென்னை, மண்டலம்-04, வார்டு-48,தண்டையார்பேட்டை தாலுக்கா, பழைய வண்ணாரப்பேட்டை, ராமானுஜ ஐயர் சாலை (பாம்பே ஹோட்டல் தெரு) மகாராணி மெட்ரோ ரயில் பார்கிங் எதிரில் மூன்று மாடி கட்டிடம் சென்னை மாநகராட்சியிடம் எந்தவிதமான கட்டிட அனுமதியில்லாமல் கட்டியது தொடர்பாக நான் பலமுறை புகார் மனு அளித்தும் இதுவரை சென்னை மாநகராட்சி மண்டலம்-04ல் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நான் அறிந்த வகையில் மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் உள்ளூர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் என தெரியவருகிறது. சென்னை பெருநகர மாநகராட்சியின் கடந்த 2022-23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி ரூ.788.58 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் ஆக போடப்பட்டது. மேலும் பல நல்ல திட்டங்கள் நிதி இல்லாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அனுமதியற்ற விதிமீறல்

கட்டிடங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உரிய தொகைகளை வசூலித்தால் சென்னை பெருநகர மாநகராட்சியின் நிதிநிலைமை சீராகும். இந்த புகார் தொடர்பாக நான் ஏற்கனவே பலமுறை மேற்கண்ட அலுவலருக்கு புகார் அனுப்பியும் அவர் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2. எனவே இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது மனு மற்றும் ஆவணங்களின் நகல்கள் இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கோப்பில் எடுத்து விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டிடம் மீதும் அதன் மீது தற்போது வரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 15.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 20.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, பழைய வண்ணாரப்பேட்டை ராமானுஜ சாலையில் மெட்ரோ ரயில் பார்கிங் எதிரில் மூன்று மாடிக்கட்டடம் மாநகராட்சியில் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது. இது குறித்து மாநகராட்சி அலுவலர்களுக்கு பல புகார் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட கட்டடத்தின் உரிமையாளர் செல்வாக்கு மிக்கவர் என்பதால் சம்பந்தப்பட்ட கட்டடத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மாநகராட்சி அலுவலர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர். எனவே, மேற்கண்ட விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டட உரிமையாளர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட கட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி செயற் பொறியாளர் 20.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது பின்வரும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, பழைய வண்ணாரப்பேட்டை ராமானுஜ சாலையில் மெட்ரோ ரயில் பார்கிங் எதிரில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் தரை தளம், முதல் தளம் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்திற்கு Stop work notice / Notice calling for Approved Plan Notice 30.4.2022 அன்றும், 21.6.2022 அன்று Lock and Seal and Demolition Notice–ம் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து Deoccupation Notice 16.2.2023 அன்றும் மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக மேற்கண்ட கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -4ன் செயற் பொறியாளர் 22.2.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட கட்டிடமானது 25 ஆண்டுகள் முடிந்த பழைய கட்டிடம் ஆகும் என்றும், இதற்கு ஏற்கனவே கட்டட அனுமதி (1769/1999 நாள்:05.05.1999) அப்ரூவல் பெறப்பட்டுள்ளது எனவும், மேலும் CMRL மூலம்

மனையின் முற்பகுதியில் 909.11 ச.அடி அளவு இடிக்கப்பட்டு புதியதாக 7.10 x 11.90 = 909.11 x 2 =1818.22 ச.அடி அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், உரிமையாளருக்கு வேலை நிறுத்த தாக்கீது நாள்:30.04.2022 மற்றும் Lock and Seal தாக்கீது நாள்:21.06.2022 மற்றும் De-Occupation தாக்கீது நாள்: 16.02.2023 வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தண்டையார் பேட்டை, ராமானுஜ ஐயர் சாலையில், மகாராணி மெட்ரோ ரயில் பார்க்கிங் எதிரில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டப்படும் மூன்று மாடி கட்டடம் தொடர்பாக மனு அளித்தும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென தெரிவித்து தனது மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் தன்னுடைய மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றில், சென்னை தண்டையார்பேட்டை, ராமானுஜர் ஐயர் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் மூன்று மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் மேற்குறிப்பிட்ட கட்டடம், தரைத்தளம் மற்றும் முதல் தளம் மட்டும் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 30.05.2022 நாளிட்ட மனு அளிக்கும் முன்பாகவே அக்கட்டிட உரிமையாளருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4ன் அலுவலர்களால் 30.4.2022 அன்று Stop Work Notice / Notice Calling for approved plan Notice வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் 15 நாட்கள் கால அவகாசம் முடிவடைந்த பின்பு Notice வழங்காமல். 1½ மாதங்கள் கடந்த பின்னர் தான் 21.6.2022 Lock and Seal and Demolition Noticeம், அதன் பிறகு 8 மாதங்கள் கடந்த பின்னர் தான் அதாவது 16.2.2023 அன்று தான் De-Occupation Notice வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம் 4-ன் செயற்பொறியாளரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. 8 மாத காலமாக இந்நேர்வில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தினை மிகவும் வன்மையாக இம்முறைமன்றம் கண்டிக்கிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையிலும், 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் மற்றும் விதிகளின்படியும், மற்றும் -

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely–

7 (i) xx
(ii) xx
(a) xx
(b) xx
(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules – ன் படியும்:-

பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:

பெருநகர சென்னை மாகராட்சி மண்டலம் -4ன் அலுவலர்கள், சென்னை தண்டையார்பேட்டை, ராமானுஜர் ஐயர் சாலையில், அனுமதியில்லாமல் தரைதளம் மற்றும் முதல்தளம் கட்டப்பட்டுள்ள குறிப்பிட்ட கட்டட உரிமையாளருக்கு Town and Country Planning Act 1971ல் குறிப்பிட்டுள்ள கால அவகாசத்தை கடைப்பிடிக்காமல் 30.4.2022 நாளிட்டு Stop Work Notice / Notice Calling for approval plan noticeம், 1½ மாதங்கள் கடந்து 21.6.2022 அன்று Lock and Seal and Demolition Noticeம், அதன் பிறகு 8

மாதங்கள் கடந்த பின்னர் மிகவும் கால தாமதமாக 16.2.2023 அன்று De-Occupation Notice-ம் வழங்கப்பட்டுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு, மேலும் இந்நிகழ்வில் உரிய மேல் நடவடிக்கை தொடருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The field officials concerned in this case deserve to be chargesheeted sternly for their inordinate and wanton delay, inaction, collusion and complicity with the violator. Such misconduct causes a dent in the fair image of the Local Body which cannot be let off scot free by the Greater Chennai Corporation. The Commissioner of Greater Chennai Corporation is hence directed to launch severe disciplinary action against the delinquents at the earliest. The Zonal Assistant Commissioner is directed to ensure and execute definite action against the violator of the building rules following the issue of De-Occupation notice issued on 16.2.2023 before the hearing in this Forum.

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு, துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
மண்டலம்–4, பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021
5. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

2/3/23

செயலாளருக்காக.